# வேந்தனார்

## குழந்தை மொழி - பாகம் 3

**( சிறுவர் பாடல்கள் )**

**வித்துவான் க. வேந்தனார்**

**லாவண்யா பதிப்பகம்**

15/8, சுவாமி ஆச்சாரி தெரு, இராயப்பேட்டை,

சென்னை – 600 014.

Email: lavanyapathipagam@gmail.com

**வேந்தனார் குழந்தை மொழி – பாகம் 3**

**வித்துவான் க.வேந்தனார்**

© வேந்தனார் இளஞ்சேய்

முதற்பதிப்பு: 2019
பக்கம்: 44

பதிப்பு:
**லாவண்யா பதிப்பகம்**
15/8, சுவாமி ஆச்சாரி தெரு
இராயப்பேட்டை
சென்னை – 600 014.

ISBN: 978-93-85643-17-0

வடிவமைப்பு:
**எஸ். தனசேகர்**

அச்சிட்டோர்:
**Sri Raghavendra Laser Printers**
15/8, Swamy Aachari Street
Royapettah, Chennai - 600 014
Ph: 044-4266 4695, 90031 81586



# க.வேந்தனார்

**(வித்துவான் - பண்டிதர் - சைவப்புலவர் - சித்தாந்த சிரோமணி - கவிராயர் - தமிழ்ப்பேரன்பர்)**

*செந்தமிழின் உயிர்மூச்சு*
*தீம்புலவர் திறல் ஆய்ந்து பேசும் செந்நா*
*கந்தனருட் கேங்கி நிதம்*
*கவிபாடும் பேரிதயக் கருணை நெஞ்சு*
*சுந்தரநல் எழில் உருவம்*
*தோன்றியநல் நாட்டுயர்வில் தோய்ந்த அன்பு*
*பந்தமுள நாகேந்திரம் பிள்ளை என்ற*
*பாவலன் க. வேந்தன் பேர் பரவுவோமே*

**(*கவிஞர் தில்லைச் சிவன்*)**

# பதிப்புரை

வித்துவான் வேந்தனார் அவர்களின் குழந்தைப் பாடல்கள், கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாக நம் சிறார்களின் மழலைவாயில் தவழ்ந்து வருகின்றன. வேந்தனாரின் குழந்தைப் பாடல்களின் எண்ணிக்கை 35 என்றே கடந்த 60 வருடங்களாக நாமெல்லோரும் நம்பியிருந்தோம். அதனால், கடந்த ஒரு வருடமாக என் தந்தையாரின் பத்திரிகையில் வந்த ஆக்கங்களை நான் தேடி எடுத்து வருகையில், மூன்று பாடல்களை பத்திரிகை களில் இருந்து கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்தது. அவர் 'வாழை' என்ற தலைப்பில் 'ஈழநாடு' பத்திரிகையில் 13.06.1959 இல் வெளியிட்ட பாடல், 'ஆசை மாமா' என்ற தலைப்பில் ஈழநாடு பத்திரிகையில் 18.07.1959, 25.07.1959 இலும் வெளியிட்ட பாடல் மற்றும் "தங்கத்தாத்தா" என்ற தலைப்பில் 'தினகரன்' பத்திரிகையில் 5.7.1959 இல் வெளியிட்ட பாடல் ஆகிய மூன்று பாடல்களையும் இன்று தேடி எடுத்து வேந்தனார் குழந்தைமொழி - பாகம் 3இல் 10ஆம், 11ஆம், 13ஆம் பாடல்களாக இணைத்துள் ளேன். எமக்குத் தெரிந்து அவர் எழுதியுள்ள 'அக்கா', 'மாம்பழம்' என்ற தலைப்பிலான இரு கவிதைகளையும் தேடிக் கொண்டு இருக்கின்றேன்.

வேந்தனார் குழந்தை மொழி - பாகம் 1 (3 வயதிலிருந்து 7 வயதுப் பிள்ளைகளுக்கு உகந்தது) என்னும் நூல், என் தமக்கை யிரால் வெளியிடப்பட்ட 13 இசைப் பாடல்களுடன், கடந்த வைகாசி 2018இல் என்னால் வெளியிட்டு வைக்கப்பட்டது. தற்போது அவரின் 12 பாடல்கள் (வயது 8 இலிருந்து வயது 9 வரையான சிறார்களுக்கு உகந்தது) வேந்தனார் குழந்தை மொழி - பாகம் 2 என்ற நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலில் அவரின் 13 பாடல்கள் (வயது 10 இலிருந்து வயது 12 வரையான சிறார்களுக்கு உகந்தது) இசையுடன், **வேந்தனார் குழந்தைமொழி - பாகம் 3** ஆக வெளிவந்துள்ளது. இந்த வகையில் என்னிடம் இருந்த என் தந்தையாரின் 38 குழந்தைப் பாடல்களும், இசையுடன் முழுமையாக மூன்று பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளன.

நான் 1983ஆம் ஆண்டு இலண்டன் வந்தபின், 1988ஆம் ஆண்டு இங்கிருந்து யாழ் சென்ற என் நெருங்கிய நண்பர் திரு. சிவச்சந்திரன் மூலம், என் தந்தையின் கவிதை நூலான கவிதைப் பூம்பொழில், திருநல்லூர் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும் ஆகிய நூல்களையும், தட்டச்சுப் பிரதியாக அவரால் தொகுத்து வைக்கப்பட்டிருந்த 29 கட்டுரைகள் அடங்கிய 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்ற ஆவணத்தையும் மற்றும் 'சொக்கன்' அவர்கள் எழுதிய தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க. வேந்தனார் என்ற நூலையும் எடுப்பித்திருந்தேன். அத்துடன் நாம் 1966ஆம் ஆண்டில் வெளியிட்ட எம் 'தந்தையாரின் நினைவு மலர்' மற்றும் என் தந்தையார் பற்றிய சில ஆவணங்கள் ஆகியவற்றையும் எடுப்பித்து இருந்தேன். இந்த ஆவணங்களே, இன்று வேந்தனார் பற்றி எம்மால் வெளியிடப்படுகின்ற ஆவணங்கள், அவரின் ஆக்கங்கள் எல்லாவற்றிற்கும் மூல ஆதாரமாய் உள்ளது என்பதை நிம்மதியுடன் நினைவு கூர்கின்றேன்.

இந்த கவிதைப் பூம்பொழில் என் கைக்கு வந்த 1988ஆம் ஆண்டே இதிலிருந்த 35 குழந்தைப் பாடல்களையும், மூன்று பாகமாக, சிறார்களின் வயதிற்கேற்பப் பிரித்தேன். பின் அப் பாடல்களை Walthamstowவில் அன்று கணினியில் தமிழ் எழுத்துக்களை வடிமைப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்த திரு. நந்தகுமார் அவர்களிடம் கொடுத்து அச்சில் எடுத்து, அதற்கு ஓர் முன்னுரையும் எழுதி வைத்தேன்.

ஆனால் இன்று 30 வருடங்களின் பின்னர் தான், அவரின் குழந்தைப் பிள்ளைகளுக்கான பாடல்களை, சிறார்களின்

வயதிற்கேற்ப தரம் பிரித்து, இசையுடன், மூன்று பாகங்களாக வெளியிட முடிந்தது. இதனையிட்டு நான் மிகவும் நிறைவும், மன நிம்மதியும் அடைகின்றேன். அத்துடன் எமது வருங்கால தமிழ் சிறார்களுக்கு இந்நூல்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென நான் திடமாக நம்புகின்றேன்.

இப்பாடல்களை வெறுமனே மனனப் படுத்துவதோடு நின்றுவிடாமல், அதன் கருத்தையும், தூய தமிழ்ச் சொற்களின் விளக்கத்தையும் விளங்கிப் பாடப்படல் வேண்டுமென்பதே எனது விருப்பம். தமிழ் ஈழத்திலும், தமிழகத்திலும் மற்றும் உலகெங்கும் சிதறிக் கிடக்கும் நம் தமிழ் மழலைச் சிறார்கள், தம் வயதிற்கேற்ப தாம் கண்டு, உணர்ந்து இரசிக்கின்றவற்றை பிறமொழி கலவாத தூய இனிமையான, எளிமைமிக்க செந்தமிழ் மொழியிலே, அன்பையும், பண்பையும், அறிவையும், கருணை யையும், அழகுணர்ச்சியையும் ஊட்டுகின்ற இக்கவிதைகளில் கற்று இன்புறுவர் என்பது எனது நம்பிக்கை.

**லண்டன் – 11.10.2018** நன்றி

அன்புடன்
**வேந்தனார் இளஞ்சேய்**

# வித்துவான் க. வேந்தனார்

# (05.11.1918 - 18.09.1966)

வித்துவான் வேந்தனார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெயர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மரபுவழித் தமிழ்ப் புலமையாளர் களுள் ஒருவர். இவர் சிறந்த தமிழறிஞராய், தமிழ்ப் பற்றாளனாய், ஆசிரியராய், கவிஞராய், சொற்பொழிவாளராய் வாழ்ந்தவர். பத்துப்பாட்டு முதல் பாரதியார் பாடல்கள் வரை ஆராய்ந்து தெளிந்த கட்டுரைகள் எழுதியவர்.

**வாழ்க்கைக் குறிப்பு**

வேந்தனார் யாழ்ப்பாணத்து வேலணையைப் பிறப்பிட மாகக் கொண்டவர். கனகசபைப்பிள்ளை, தையல்முத்து அம்மை யார் ஆகியோருக்குத் தனியொரு குழந்தையாகப் பிறந்தார். ஆசிரியரான சோ. இளமுருகனாரின் வழிகாட்டலால் பதினாறாவது வயதில் நாகேந்திரம் பிள்ளை எனத் தனது பெற்றோர் சூட்டிய பெயரினை வேந்தனார் எனச் சுத்தமான தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டார். இளமையில் பயில்கின்ற பொழுதே இந்து சாதனம், ஈழகேசரி போன்ற இதழ்களில் இலக்கிய, சமய கட்டுரைகளை வரைந்ததோடு பின்பு வீரகேசரி, தினகரன், ஈழநாடு, சுதந்திரன் ஆகிய ஏடுகளில் ஆய்வு கட்டுரைகள் வழங்கியிருந்தார். யாழ்ப்பாணம், திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியில் ஆசிரியராக பயிற்சியினைத் தொடர்ந்த காலங்களில் இவர் சந்திக்க நேர்ந்த பரமேசுவராக் கல்லூரியின் அதிபர் கலாநிதி கு. சிவப்பிரகாசம், சி. சிதம்பரப்பிள்ளை, பண்டிதமணி கி. நவநீத கிருஷ்ண பாரதியார் போன்றோரின் தொடர்புகளும் இவரின் தமிழ் மொழி உரைநடை வளம் பெற உதவியது. வேந்தனார் வித்துவான் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தமிழ்நாடு சென்றிருந்த வேளை தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளுடன்

சில காலம் தங்கியிருக்க வேண்டியிருந்தது. அவரிடமிருந்து பெற்ற ஆழ்ந்த தமிழ் பற்றே பிற்காலங்களில் தன் குழந்தைகளுக்கு அவர் கலையரசி, இளங்கோ, தமிழரசி, இளஞ்சேய், இளம்வேள் எனத் தூய தமிழ்ப் பெயர்களை வைக்கத் தூண்டின.

### தமிழாசிரியராக

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் முதலான தமிழ் இலக்கியத்தில் இவருக்கிருந்த தேர்ச்சி காரணமாக பண்டித வகுப்புக்களுக்கும் பிற வகுப்புக்களுக்கும் மேற்படி நூல்களைப் படிப்பிக்கும் பொறுப்பை வித்துவானிடமே புலமையாளர்கள் ஒப்படைத்திருந்தனர். அவரின் பாடம் சொல்லும் ஆற்றலின் ஒரு முகத்தினை கம்பராமாயண அயோத்தியா காண்டத்து மந்தரை சூழ்ச்சிப்படலம், கைகேயி சூழ்வினைப் படலம் என்பவற்றிற்கு அவர் எழுதிய உரை வாயிலாக இன்றும் காணமுடியும். நீண்ட காலக் கற்பித்தல் அனுபவத்துடன் எழுதப்பட்ட இப்பாடநூல் இன்றும் மாணவர்களால் படிக்கப்பட்டு வருகின்றது.

### எழுத்தாளராக

வேந்தனார் சிறந்த எழுத்தாளராகவும் மேடைப் பேச்சாளராகவும் இருந்துள்ளார். எழுத்தாளர் என்ற வகையில் பல இலக்கியக் கட்டுரைகளை வேந்தனார் சமகாலத்தில் வெளிவந்த பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அவ்வப்போது எழுதி வந்துள்ளார்.

### கவிஞராக

வித்துவான் சிறந்த கவிஞராகவும் தமிழ் உலகிற்கு அறிமுகமாகியுள்ளார். அவ்வப்போது இவர் எழுதிய கவிதைகள் ஈழநாடு முதலான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதுடன் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகி வந்துள்ளன. அப்பாடல்களுடன் சிலவற்றைத் தொகுத்து **கவிதைப் பூம்பொழில்** என்னும் நூலை ஸ்ரீ லங்கா புத்தகசாலை 1964ஆம் ஆண்டு வெளியிட்டது. அத்தொகுப்புக்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார் ஆகியோர் சிறப்புப் பாயிரம் நல்கி

யிருந்தனர். வேந்தனாரின் சிறுவர்களுக்கான கவிதைகள் சுட்டிக் காட்டத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். அவரின்,

*காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்*
*கட்டிக் கொஞ்சும் அம்மா*
*பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்*
*பருகத் தந்த அம்மா*

எனும் சிறுவர்க்காக எழுதிய பாடல் இன்றும் சிறுவர்களால் பாடப்பட்டு வருகிறது.

### பட்டங்கள்

மதுரை தமிழ்ச் சங்கத்தில் **பண்டிதர்** பட்டத்தையும் சைவ சித்தாந்த சமாசத்தில் **சைவப் புலவர்** பட்டத்தையும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் **வித்துவான்** பட்டத்தையும் பெற்றவர் வேந்தனார். வாழுங் காலத்திலேயே திருவாவடுதுறை ஆதீனத் தாரால் **'தமிழ்ப்பேரன்பர்'** என்ற பட்டமும் (1947), ஸ்ரீலங்கா சைவாதீனத்தினரால் **'சித்தாந்த சிரோமணி'** (1964) என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

## வேந்தனாரின் நூல்கள்

**இந்து சமயம் (பாடநூல் – 1959)**

**திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும் (1961)**

**கவிதைப் பூம்பொழில் (1964, 2010)**

**குழந்தை மொழி (சிறுவர் பாடல்கள், 2010)**

**தன்னேர் இலாத தமிழ் (கட்டுரைத் தொகுப்பு, 2010)**

**கம்பராமாயணம் – கும்பகருணன் வதைப்படலம் (பாடநூல்)**

**கம்பராமாயணம் – காட்சிப்படலமும் நிந்தனைப் படலமும் (பாடநூல்)**

**கம்பராமாயணம் – மந்தரை சூழ்ச்சிப்படலமும் கைகேயி சூழ்வினைப் படலமும் (பாடநூல் – 1961)**

**பாரதியார் பாடல்கள் – விளக்கவுரை (பாடநூல் – 1962)**

குழந்தைமொழி – பாகம் 1 (2018)

குழந்தைமொழி – பாகம் 2 (2019)

குழந்தைமொழி – பாகம் 3 (2019)

வேந்தனார் கட்டுரைகள் – பாகம் 1 (2019)

வேந்தனார் கட்டுரைகள் – பாகம் 2 (2019)

## வேந்தனாரின் வெளிவரவுள்ள நூல்கள்

வேந்தனாரின் கம்பராமாயண ரசனை

வேந்தனாரின் பாரதியார் பாடல் ரசனை

வேந்தனாரின் சைவசமய கட்டுரைகள்

வேந்தனார் கட்டுரைகள் – பாகம் 3


வேந்தனார் கட்டுரைகள் – பாகம் 4

## வேந்தனார் பற்றிய நூல்கள்

- புகழ்வளச் சோலையின் ஒரு மலர் (1966)
- மல்லிகை – 1966 ஐப்பசி இதழ்
- தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க. வேந்தனார் (1984)
- வித்துவான் வேந்தனார் (2010)
- வித்துவான் வேந்தனார் நூற்றாண்டு விழா மலர் (2019)

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பார்க்குந் தெய்வம் | 13 |
| 2. | நாட்டில் அன்பு | 15 |
| 3. | உதவி | 17 |
| 4. | செயல் | 19 |
| 5. | ஒழுக்கம் | 21 |
| 6. | பொன். இராமநாதன் | 23 |
| 7. | புலவர் கோன் | 25 |
| 8. | பச்சைக்கிளியின் பழைய நினைவுகள் | 27 |
| 9. | கூண்டிற் கிளி | 31 |
| 10. | வாழை | 35 |
| 11. | ஆசை மாமா | 37 |
| 12. | நொண்டி | 39 |
| 13. | தங்கத் தாத்தா | 40 |
| | வேந்தனார் புகழ்... | 42 |
| | வெளிவந்துள்ள சிறுவர் பாடல்கள் | 44 |


அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.
– திருக்குறள்

# 1. பார்க்குந் தெய்வம்

1 அன்பின் சாயல் ஒளிவீச
அறிவின் ஆற்றல் நிழலாட
என்றும் இன்பம் எமக்குதவும்
எழிலார் கல்விப் பொருளொன்றே.


2 உள்ளத் தூறி உணர்வாகி
உரிமை வேட்கை அலைமோதுந்
தெள்ளத் தெளிந்த கல்வியைப்போல்
திருவும் எமக்கு வேறுண்டோ.

3 காலங் கடந்து மொழிகடந்து
கலைதேர் புலவர்க் குயிராகி
ஞாலம் புரக்குங் கல்வியைப்போல்
நற்றாய் எமக்கும் வேறுண்டோ.

4 கொல்லுந் துன்பம் வந்தாலும்
குளிர்ந்த உளத்தால் வரவேற்று
வெல்லும் வீரம் எமக்குதவும்
விறலார் கல்விப் பொருளொன்றே.

5 கண்போல் எம்மைக் காப்பாற்றிக்
கலைதேர் வாழ்வில் நிலையாக்கும்
பண்பார் கல்விப் பொருள்போலப்
பார்க்குந் தெய்வம் வேறுண்டோ.

6 பெற்ற இளமைப் பருவநலம்
பேணிக் கல்வி நனிபயின்று
வெற்றி யீட்டுங் கலைமுரசை
விண்ணா டதிரக் கொட்டிடுவோம்.



# 2. நாட்டில் அன்பு


1 நாட்டில் அன்பு வேண்டும்
நன்றி அறிதல் வேண்டும்
பாட்டுப் பாட வேண்டும்
பந்தும் அடிக்க வேண்டும்.

2 துள்ளிக் குதிக்க வேண்டும்
தொண்டு செய்ய வேண்டும்
பள்ளிக் கூடஞ் சென்று
பாடம் படிக்க வேண்டும்.

3 ஈர நெஞ்சம் இல்லார்
எவர் எதிர்த்த போதும்
வீரன் போசைப் போன்ற
வீர நெஞ்சம் வேண்டும்.

4 ஆய்ந்து பஞ்சை நூலாய்
ஆக்கப் பழக வேண்டும்
காந்தித் தாத்தா போலக்
கதரும் உடுக்க வேண்டும்.

5 பொருளும் நிலமும் எவர்க்கும்
பொதுவாய் இருத்தல் வேண்டும்
அருளுந் தொண்டும் உலகை
ஆளப் பார்க்க வேண்டும்.



# 3. உதவி

1 கண்ணில் லாத குருடன்
காலில் லாத முடவன்
உண்ண உணவு கேட்டால்
உவந்து கொடுக்க வேண்டும்.


2 ஆருங் குற்றம் செய்தால்
அதனைப் பொறுத்தல் வேண்டும்
சீறும் கோபம் ஆறிச்
சேர்ந்து வாழ வேண்டும்

3 உள்ள பொருளில் பிறர்க்கும்
உதவி செய்ய வேண்டும்
கள்ளம் கபடம் செய்தால்
கடவுள் பொறுக்க மாட்டார்.

4 இல்லா தார்க்குப் பொருளை
ஈவோர் தம்மைக் கண்டால்
நல்லாய் வாழ்த்த வேண்டும்
நன்றி கூற வேண்டும்.

5 உன்னை நீயே புகழ்ந்தால்
ஊரார் எல்லாம் சிரிப்பார்
அன்னை போன்றாய் என்றே
அறிஞர் புகழ வேண்டும்

6 வெள்ளம் போன்ற துன்பம்
மேலும் மேலும் வரினும்
உள்ளங் கலங்கி டாமல்
உழைக்கும் ஊக்கம் வேண்டும்.



# 4. செயல்

1 செய்யும் வேலை எல்லாம்
திருத்த மாகச் செய்தால்
உய்ய வழியும் ஆகும்
ஊரும் புகழ்ந்து பேசும்.


2 அண்டிக் கெடுக்க நினைத்தால்
அழிவு நமக்கே ஆகும்
ஒண்டிக் கதைகள் கேட்டே
உரைக்கும் பழக்கம் தீது.

3 அரிய நூல்கள் எல்லாம்
அழுத்த மாகக் கற்ற
பெரியோர் கூறும் சொல்லைப்
பேணி நடத்தல் வேண்டும்.

4 பண்பைப் பார்த்து நன்றாய்ப்
பழகிக் கொண்ட பின்பே
நண்பன் இவனே என்று
நம்பி நடக்க வேண்டும்.

5 வாடித் துன்பத் தாலே
மடிய நேர்ந்த போதும்
கூடிப் பிரிந்தி டாமல்
குழைந்து வாழ வேண்டும்.

6 கள்ளச் சாட்சி சொல்லிக்
காசு தேடு வோரைத்
தள்ளி மிதிக்க வேண்டும்
சனியாய் நினைக்க வேண்டும்.



# 5. ஒழுக்கம்

1 அல்லும் பகலும் நல்ல
ஆர்வத் தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்.

2 ஊனும் உலர்ந்து பசியால்
உயிரும் போக வரினும்
மானம் இன்றிப் பிச்சை
வாங்கி உண்ண வேண்டாம்.

3 பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத் தோடும் ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்.

4 இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது.

5 கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்.

6 பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.



# 6. பொன். இராமநாதன்

1 பொன்ராம நாதன் ஈழம்
போற்றும் வீரத் தலைவன்
தன்காலத் தமிழர்க் கன்புத்
தாயைப் போன்ற தலைவன்.

2 கரும்பிலினிய தமிழைக் கற்றுக்
கருணை நிறைந்த தலைவன்
இரும்பு மனமும் இளகும் வண்ணம்
இனிய சொல்லும் தலைவன்.

3 தெய்வமெம்மைக் காக்கும் என்று
சிந்தை மகிழுந் தலைவன்
சைவநெறியின் மரபை உலகில்
தழைக்கச் செய்த தலைவன்.

4 இலங்கும்பர மேசு வரா
இராமநாதன் என்றே
துலங்கும்கல் லூரி இரண்டைத்
தோற்று வித்த தலைவன்.

5 மன்னுபுகழ்க் கொழும்பில் சைவ
வாழ்வு நின்று மலரப்
பொன்னம் பலவாணர் கோவில்
புனைந்து போற்றும் தலைவன்.



# 7. புலவர் கோன்

1 கூவுங் குயிலே உனக்கும் ஒன்று
   கூறு கின்றேன் கேளாய்
நாவில் இனிக்கும் தேனைப் போல
   நயந்து நயந்து கூவாய்.

2 ஆடிப் பிறப்புப் பாட்டுப் பாடி
   அமிழ்தின் சுவையைத் தந்தோன்
தாடிக் கிழவன் தங்கத் தாத்தா
   தமிழைப் பாடிக் கூவாய்.

3 ஆடு கதறும் அன்புக் குரலை
   ஆவி உருகிக் கூவாய்
தாடி அறுந்த வேடன் கதையைச்
   சாற்றிச் சாற்றிக் கூவாய்.

4 புத்தமு தென்றே புகலுந் தமிழின்
   புதிய புனைவாய்ப் பொலியும்
கத்தரி வெருளிப் பாட்டை நீயுங்
   கனிந்த குரலால் கூவாய்.

5 மாவின் கனியைத் தின்னும் சிறுவர்
   மனத்தில் தெய்வம் மணக்கும்
பாவின் சுவையைக் குயிலே நீயும்
   பாடிப் பாடிக் கூவாய்.

6 மனம்நி றைந்த செல்வன் வாழ்வின்
மாண்பைப் பாடிப் பாடி
இனம்நி றைந்த குயிலே நீயும்
இனிய குரலால் கூவாய்.

7 பஞ்சக் கூழ்புழுக் கொடிய லோடு
பனையின் பயனும் பாடி
நெஞ்சந் தளிர்க்கும் தங்கத் தாத்தா
நினைவைக் கூறிக் கூவாய்.

8 இலவு காத்த கிளியி னோடு
இலங்கை வளமும் பாடும்
புலவன் தங்கத் தாத்தா பூண்ட
புகழைப் போற்றிக் கூவாய்.

9 பாலை விற்கும் பாவை அந்தப்
பவளக் கொடியின் கதையைக்
காலங் கடந்து வாழச் செய்த
கவிஞன் என்று கூவாய்.

10 செந்த மிழ்த்தாய் சீரை எமக்குச்
செப்பும் புலவர் கோனைக்
கொந்தார் சோலைக் குயிலே நீயும்
கூவிக் கூவி மகிழ்வாய்.

# 8. பச்சைக்கிளியின் பழைய நினைவுகள்

(ஓர் ஆங்கிலப் பாட்டின் மொழிபெயர்ப்பைத் தழுவியது)

**பவளம் வளர்த்த கிளி**

1 பவளம் பச்சைக் கிளியைப் பிடித்துப்
பாலும் பழமுங் கொடுத்தாள்
தவழும் பருவக் குழந்தைக் குருகும்
தாயைப் போல வளர்த்தாள்.

2 பச்சைக் கிளியும் பவளம் போலப்
பாடும் தமிழிற் பேசும்
இச்சை யுடனே பவளம் கேட்க
இளமை நினைவைக் கூறும்

**முட்டையில் கரு**

3 முட்டைக் குள்ளே கருவாய் நானும்
முடங்கி வாழ்ந்த போது
வட்ட மான உலகம் நீல
வண்ணம் என்று நினைத்தேன்.

**கூட்டிலே குஞ்சு**

4 குடியி ருந்த முட்டை போகக்
கூட்டில் குஞ்சாய் வாழ்ந்தேன்
கொடியும் குச்சும் கொண்ட உலகம்
கூடே என்று நினைத்தேன்.



## இறகு முளைத்த சிறு பறவை

5 இறகு முளைக்கக் கூட்டின் வெளியே
இறங்கி நின்று பார்த்தேன்
நிறையக் கிளைகள் இலைக ளோடு
நின்ற மரத்தைக் கண்டேன்.

6 உச்ச மான மரத்தின் மேலே
உலாவி வாழ்ந்த போது
பச்சை யான இலையால் உலகைப்
படைத்த தென்று நினைத்தேன்.

## பறக்கும் பெரும் பறவை

7 காலப் போக்கில் இறகு வலிமை
காட்டி வளர நானும்
நீல வானில் பறந்து நின்று
நேரில் உலகைப் பார்த்தேன்.

8. உலகம் மிகவும் பெரிய தென்ற
உண்மை உணர்ந்து கொண்டேன்
நிலவும் நீல வானின் அகலம்
நினைந்து வியப்புக் கொண்டேன்.

9 இந்த உலகின் பரப்பை நோக்கி
எனது சிறுமை தெரிந்தேன்
எந்த வகையில் முயன்றும் உலகின்
எல்லை காண ஏலுமோ.



# 9. கூண்டிற் கிளி

**பவளம்**

1 பச்சைக் கிளிநீ பாடாயோ
பவளம் என்றும் கூறாயோ
கொச்சி மிளகாய் தருகின்றேன்
கொய்யாப் பழமும் தருகின்றேன்.

2 வண்ணக் கூண்டில் இருக்கின்றாய்
வளையத் தின்மேல் நடிக்கின்றாய்
கண்ணில் நீரை நிறைக்கின்றாய்
கவலை உனக்கும் வேறுண்டோ.

3 பூனை வந்து பிடிக்காமல்
பூட்டி உன்னைக் காத்திடுவேன்
தேனைப் போன்ற மாங்கனிகள்
தேடித் தின்னத் தந்திடுவேன்.

**கிளி**

4 பச்சைக் கிளியும் நானேதான்
பவளக் கொடியும் நீயேதான்
கொச்சி மிளகாய் தின்றென்ன
கொய்யாப் பழமும் தின்றென்ன.

5 கூட்டில் என்னை அடைத்துநீ
குழந்தை மொழிகள் சொல்கின்றாய்
வீட்டில் உன்னை அடைக்கநீ
விரும்பும் இன்பம் கொள்வாயோ.

6 காலைத் தூக்கி நடிக்கின்றாய்
கையைக் காட்டி அழைக்கின்றாய்
கோலப் பந்தை அடிக்கின்றாய்
கூந்தல் பின்னி முடிக்கின்றாய்.

7 பள்ளிக் கூடம் போகின்றாய்
படமும் பார்க்கப் போகின்றாய்
வெள்ளம் பெருகும் ஆற்றிலே
வீழ்ந்து நீந்திக் குளிக்கின்றாய்.

8 கல்லைத் தூக்கி எறிகின்றாய்
கனிகள் வீழ்த்தித் தருகின்றாய்
நல்லம் மாவுன் தோழியுடன்
நாளுங் கூடித் திரிகின்றாய்

9 சிறகை விரித்துப் பறக்கவோ
தேடிப் பழத்தைப் புசிக்கவோ
பறவை இனத்தைக் கலக்கவோ
பாவி எனக்கு விதியில்லை.

10 பச்சைச் சிறகை விரித்துநான்
பறந்து வானிற் பாடுவேன்
உச்சிக் கொம்பிற் சேருவேன்
உன்னை அங்கு கூவுவேன்.

11 சோலைதோறும் சென்று சென்று
தோழி மாரைக் கூடுவேன்
மாலை தோறும் வந்துனது
மாம ரத்திற் பாடுவேன்.

12 தோழிக்கிளிகள் சூழ வந்து
தோழி யுன்னைப் போற்றுவேன்
வாழி பவளம் என்னைநீ
வைத்த சிறையில் நீக்குவாய்.

13 அடிமைவாழ்வு ஒழிக வென்றே
அன்புக் காந்தி சொல்லவும்
கொடிய சிறையில் வைத்தென்னைக்
கொல்லு கின்றாய் நல்லதோ.

**பவளம்**

14 நல்ல மொழிகள் கூறியே
நாண வைத்தாய் என்னைநீ
செல்வக் கிளியென் தோழியே
சிறையை நீக்கி விடுகின்றேன்.

15 கூட்டில் உங்கள் குலத்தினைக்
கொண்ட டைத்தல் கொடியது
காட்டில் வானிற் பறந்துநீர்
காணும் இன்பம் பெரியது.

16 பவளம் கூட்டைத் திறந்தனள்
பச்சைக் கிளியும் பறந்தது
அவளும் வானைப் பார்த்தனள்
அன்புக் குரலுங் கேட்டது.



# 10. வாழை


1 வாழை நல்லாய்க் குருத்தெறிந்து
வளருகின்ற தோட்டம்
வழிவழியாய் எங்களுக்கு
வாழ்வு தந்த தோட்டம்.

2 கதலி வாழைக் கப்பல் வாழைக்
கனிகள் தின்று பாரும்
கரும்பைப் போல இனிக்கும் நல்ல
கனிகள் தின்று பாரும்.

3 இதரையோடு மொந்தன் வாழை
இந்த வரிசை எல்லாம்
இனத்துக் கினமாய் குலைகள் போட்டே
இருக்கும் வடிவைப் பாரும்.

4 பன்றி வாழை யானை வாழைப்
பழங்கள் இந்தப் பழங்கள்
தின்று பார்த்தால் தெரியும் நல்ல
தேனைப் போல இனிக்கும்.

5 வாழையடி வாழையைப் போல்
வாழுகின்ற நாங்கள்
வழிவழியாய் அன்பு நின்று
வாழ்க என்று வாழ்வோம்.



# 11. ஆசை மாமா

1 ஆசை மாமா எந்தன் மாமா
அருமையான மாமா
நேசமாக என்னை நினைந்து
நெஞ்சம் குளிரும் மாமா.

2 கட்டி அணைத்து முத்தம் தந்து
கதைகள் சொல்லும் மாமா
கிட்ட வந்து கன்னத்திலே
கிள்ளிச் சிரிக்கும் மாமா.

3 வந்துடனே என்னைத் தூக்கி
மடியில் வைக்கும் மாமா
பந்தும் நல்ல பம்பரமும்
பலூனும் தந்த மாமா.

4 வண்ணச் சட்டை தொப்பி போட்டு
வாரித் தூக்கும் மாமா
உண்ணப் பழமும் இனிப்புந் தந்து
உவகை கொள்ளும் மாமா.

5 புளுகும் பொய்யும் கூடாதென்று
புத்தி சொல்லும் மாமா
அழுது விழுந்தால் ஓடிவந்து
அணைத்துத் தூக்கும் மாமா.

6 ஓடும் மூன்று சில்லுச் சைக்கிள்
ஒன்று வாங்கி வந்து
பாடும் என்தன் பாட்டைக் கேட்டுப்
பரிசில் தந்த மாமா.

7 அம்மா என்னை அடிக்க வந்தால்
அணைத்துக் காக்கும் மாமா
சும்மா இருந்தால் ஓடி ஆடித்
துள்ளச் சொல்லும் மாமா.

8 தோளில் என்னைச் சுமந்து கொண்டு
சுற்றித் திரியும் மாமா
நாளும் பொழுதும் படிக்கச் சொல்லி
நன்மை புரியும் மாமா.


# 12. நொண்டி

1 காலில் லாத நொண்டி மிகவும்
களைத்துப் போனான் அம்மா
கோலை ஊன்றி நடந்து முதுகு
கூனிப் போனான் அம்மா.

2 பாவம் அந்த நொண்டி எங்கள்
பள்ளிக் கூடத் தெருவால்
போகும் போது கண்டேன் ஐயோ
புண்கள் காலில் அம்மா.

3 இனிப்புக் கடலை வாங்கக் காசு
இனிமேல் கேட்க மாட்டேன்
தனித்த நொண்டி தவிப்பைப் போக்கத்
தாரும் அம்மா காசு.

4 கந்தை சுற்றும் நொண்டிக் காலைக்
காட்டிப் பிச்சை கேட்கிறான்
ஐந்து சதம்நீ தந்தி டம்மா
அவனைத் தேடிப் போடுவேன்.



# 13. தங்கத் தாத்தா

1 தங்கத் தாத்தா நல்ல தாத்தா
தாடி வளர்த்த தாத்தா
எங்க ளுக்கே இனிய பாக்கள்
இயற்றித் தந்த தாத்தா.

2 நல்ல ஊர்ந வாலி வாழும்
நடுங்கற் கிழவர் தாத்தா
கல்லுங் கனியப் பாக்கள் பாடிக்
கருத்து மகிழுந் தாத்தா.

3 சிறுவர் நாங்கள் சேர்ந்துபாடச்
செய்து தந்தார் பாக்கள்
சிறுவர் பேசும் செந்தமிழால்
செய்து தந்தார் பாக்கள்.

4 தாடித் தாத்தா பாடித் தந்த
ஆடிப் பிறப்புப் பாட்டைக்
கூடிக் கூடிப் பாடி நாங்கள்
கூழுங் காய்ச்சிக் குடிப்போம்.

5 பாலை விற்ற பவளக் கொடியாள்
பட்ட பாட்டைப் பாடிக்
காலைத் தூக்கித் துள்ளி ஆடிக்
கரும்பு வாங்கித் தின்போம்.

6 வாயில் ஊறி இனிக்கும் அந்த
மாம்ப ழத்தின் பாட்டைக்
கோயில் தோறும் சென்று நாங்கள்
கூறி இன்பங் கொள்வோம்.

7 கத்தரித் தோட்டக் காவலன் தாத்தா
கண்டு பிடித்த காவலன்
மெத்தவும் நல்ல காவலன் தனது
மீசை முறுக்காக் காவலன்.

8 ஓரி டத்தும் நின்றி டாமல்
ஓடு கின்றாய் அம்புலி
ஆரி டத்தும் தாத்தா போல
அன்பு கொள்வாய் அம்புலி.

9 தாடி அறுந்த வேடன் கதையைச்
சாற்றும் எங்கள் தாத்தா
ஓடும் வெண்ணி லாவைக் கூவி
உள்ளம் மகிழும் தாத்தா.

10 ஆடு கதறும் குரலைப் பாடி
ஆவி உருகுந் தாத்தா
கூடும் இனிமைத் தமிழைப் பாடிக்
குதிக்குங் குழந்தை தாத்தா.



# வேந்தனார் புகழ்...

**உரையாசிரியராக...**

“பல்லாயிரம் தமிழ் மாணவர்கள் வேந்தனாரின் உரைச் சிறப்பை அறிந்து தமிழ் இலக்கியத்தில் ஆர்வமும் உயர்ச்சியும் பெற அவர் வழிவகுத்தார் எனலாம். அரும்பதவுரை, பொழிப்புரை, தெளிவுரை, இலக்கணக் குறிப்பு, எடுத்துக்காட்டு, வரலாறு, நயம் உரைத்தல் என்பனவாக அவர் குறிப்பிட்டு எழுதிய திரவியங்கள் தேடக்கிடைக்கதவை” **(புலவர் அமுது)**

**கட்டுரையாசிரியராக...**

“ஆசிரியருக்குரிய விளக்கம், சொற்பொழிவாளர்க்குரிய ஓசைநயம், தமிழறிஞர்க்குரிய இனிய செந்தமிழ்ச் சொல்லாட்சி ஆகிய மூன்றும் ஒன்றிணைந்ததோர் உரைநடை வேந்தனாரின் உரைநடை அதுவே அவரின் தனித்தன்மையான உரைநடை”

**(வித்துவான் சொக்கன்)**

**சித்தாந்த சிரோமணியாக...**

1942ஆம் ஆண்டில் ஓர் நாள் காஞ்சி வச்சிரவேலு முதலியார் (இந்தியா) என்னுடன் பேசிக் கொண்டிருக்கையில் நான் கேட்டேன். இலங்கையில் சைவ சித்தாந்த சாத்திரத்தை நன்கு அறிந்து கொண்டவர் வரிசையில் நீங்கள் யாரைச் சிறப்பாகக் குறிப்பிடுவீர்கள்? அதற்கு அவர் முகமலர்ச்சியோடு, ஆர்வமும் அற்புதமும் நிறைந்த முகபாவத்தோடு “யாழ்ப்பாணத்தில் ஒருவரைக் கண்டேன். வயதால் மிக இளையவர். சைவ சித்தாந்தத்தை விளக்குவதில் அவருக்கு இணையானவர் வெகு சிலரே. இந்தியாவிலும் இத்தகைய அறிஞரைக் காண்பது அபூர்வம் என்றார். அவர் யார் எனக் கேட்டேன். அவரிற்கு **“வேந்தனார்”** என்று பெயர் என்றார்.

**(நவாலியூர் சோ. நடராசன்)**

**கவிஞராக...**

*கொந்தளிக்கும் உணர்ச்சியினால் புலமைவீறு*
*கொண்ட பெருங் கவியரசே தமிழ்ச் சொல்மேடை*
*வந்தபெரு நாவலனே நின்சீர் இந்த*
*வையமெலாம் பரவிவர வாழ்த்துகின்றேன்*

**(கவிஞர் தில்லைச்சிவன்)**

**தமிழ்ப்பேரன்பராக...**

வேந்தனாரின் பேச்சு மூச்செல்லாம் தமிழ். கனவு நனவு எல்லாம் தமிழ் உள்ளம் உயிரெல்லாந் தமிழ். அவர் வாழ்வு தமிழ். தமிழே அவர். அவரே தமிழ். தனித்தமிழ்...

**(பரமேசுவராக் கல்லூரி ஆசிரியர்)**

**சொற்பொழிவாளராக...**

சிறந்த சிந்தனையாளராய், நல்ல கவிஞராய், தரமான கட்டுரையாசிரியராய் விளங்கிய அவர் மிகுந்த ஆற்றல் பொருந்திய சொற்பொழிவாளராயும் விளங்கினார். நாற்பதுகள் தொடக்கம் ஐம்பதுகள் வரை (1940 - 1950) அவர் நிகழ்த்திய மேடைப் பேச்சுக்கள் எண்ணுக் கணக்கற்றவை. இளைஞர்களும், தமிழ் சுவைஞர்களும் பழமரம் நாடும் பறவைகள் போல அவரின் பேச்சுக்களைக் கேட்க பல்லாயிரக் கணக்கில் திரண்டு வந்ததை நேரில் கண்டிருக்கின்றேன்... **(வித்துவான் சொக்கன்)**

**குழந்தைக் கவிஞர்...**

*பாலர்களின் உளமினிக்க பாலைக் காய்ச்சி*
*பக்குவமாய் தந்த நல்லதாயின் உள்ளம்*
*ஞாலமதில் உன்கவியில் நாளும் வாழும்*
*நலமறிவோம் நறுந்தேனை ஆர்ந்தே தெய்வ*
*சீலமுடன் தெய்வநெறி துலங்க நின்ற*
*செய்யுளெலாம் செகமீது வாழும் அந்தக்*
***காலமதை அவை வெற்றி காணும் ஐயா***
***கவின் தமிழில் அவையென்றும் ஒளிரும் மெய்யாய்.***

**(கவிஞர் இ. நாகராஜன்)**

# வித்துவான் வேந்தனாரின் இறுவெட்டுடன் வெளிவந்துள்ள குழந்தை மொழி பாடல்கள்

## வேந்தனார் குழந்தை மொழி – பாகம் 1

1. அம்மாவின் அன்பு
2. பாட்டி
3. எங்கள் வீட்டுப்பூனை
4. வெண்ணிலா
5. புள்ளிக்கோழி
6. மயில்
7. குயில்
8. பந்தடிப்போம் நாங்கள்
9. ஊஞ்சல் ஆடுவோம்
10. நல்லூர்
11. ஆறுமுக நாவலர்
12. இளமைப்பருவம்
13. இனிய மொழிகள்

## வேந்தனார் குழந்தை மொழி – பாகம் 2

1. வள்ளி
2. பவளம்
3. பறவைக் குஞ்சு
4. மல்லிகைத் தோட்டம்
5. கூவுதே குயில்
6. கரும்பு தின்போம்
7. இளநீர் குடிப்போம்
8. கொடிய மொழிகள்
9. கீரிமலை
10. பண்ணைப் பாலம்
11. அணில்
12. மான்